1.11..2019

அசல் வழக்கு எண்: 147-2012

வா.சா.2 முருகேசன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு பூர்வீகம் மாவிலிபட்டி கிராமம் ஆகும். மாவிலிபட்டிக்கு வருவாய் கிராமம் கரடிக்கல். மாவிலிபட்டிக்கு பஞ்சாயத்து கிண்ணிமங்கலம் பஞ்சாயத்துக்கு உட்பட்டது. வழக்குசொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. வாதிக்காக நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதியின் மகளை தான் நான் திருமணம் செய்துள்ளே் என்றால் சரி தான். வாதிக்கு தாவா சொத்து மாயாண்டி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்வார்கள். மாயாண்டி தேவரின் அப்பா பெயர் தெரியாது. மாயாண்டி தேவர் பெயரில் வருவாய் ஆவணங்களில் இருந்ததா என்று தெரியாது தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் எனக்கு நிறைய நில புலன்கள் உள்ளது. வாதியின் மகளை திருமணம் செய்திருப்பதால் தாவா சொத்தில் உள்ள விவசாயத்திற்கு உரம் மற்றும் கலை எடுக்க சென்றதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமாகி 28 ஆண்டுகள் ஆகிறது அதற்கு முன்னமே நான் விவசாய வேலை வாதிக்கு செய்துள்ளேன். தாவா சொத்திற்குரிய வாதி பெயரிலான ஆவ6ணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் மாயாண்டி தேவரிடமிருந்து வாதி கிரையம் பெற்ற ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். வாதி கிரையம் பெற்ற ஆவணத்தில் மாயாண்டிதேவர் வாதிக்கு கிரையம் கொடுப்பதாக வாசகம் கண்டுள்ளது. வாதி கிரையம் பெற்ற சொத்து மாயாண்டி தேவருக்கு பூர்வீகசொத்தா கிரைய சொத்தா என்று தெரியாது. தாவா சொத்தும் அதனுடன் சேர்ந்த சொத்தும் சுந்தரதேவருக்கு பாத்தியப்பட்ட

சொத்தா என்று எனக்குத் தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே வழக்கு நடந்த விபரம் பற்றி எனக்குத் தெரியும். தாவா சொத்து பிரதிவாதியின் முன்பாத்திய சொத்து என்றும் வாதி உறவினர் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை இன்னும் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு வடக்கே கண்மாய் உள்ளதா என்றால் சரியல்ல கிழமேல் ரோடு உள்ளது அதற்கு அடுத்து கண்மாய் உள்ளது. வருவாய் ஆவணங்களின் படி தாவா சொத்துக்கு வடக்கே கண்மாடிய் உள்ளது என்றும் தவறாக ரோடு உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல

மறுவிசாரணை

தாவா சொத்துக்கு தெற்கு சுந்தாயம்மாள் பாண்டி, வடக்கே கிழமேல் ரோடு மற்றும் புரம்போக்கு நிலம். கிழக்கே சின்னன் கணேசன் நிலம் மேற்கே பொன்னுசுந்தன் இடம் உள்ளது மேற்படி நான்குமால் தற்போதைய நான்குமால் என்றால் சரிதான்.

<u>மறு முன்விசாரணை</u>

நான்குமால் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.